பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
21 12 2024 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கொப்பரை தேய்காய் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சிலின் 55வது கூட்டம் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெறுகிறது.
- சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில் நடப்பாண்டிற்கு 10 ஆயிரம் கோடி ரூபாயும், அடுத்த ஆண்டிற்கு 16 ஆயிரம் கோடி ரூபாயும் மத்திய பட்ஜெட்டில் ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.
- பண மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த திரு. செந்தில் பாலாஜிக்கு ஜாமின் கிடைத்தவுடன் அவரை மாநில அமைச்சரமாக நியமித்தது தவறு என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- விஜய் ஹசாரே கோப்பைக்கான கிரிக்கெட் லீக் போட்டியில் தமிழ்நாடு இன்று சண்டிகர் அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<>>>>

கொப்பரை தேய்காய் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தில்லியில் நேற்று நடைபெற்ற அமைச்சரக் குழுவின் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் இதனைத் தெரிவித்தார்.

விவாசயிகள் நலனுக்காக தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அமைச்சரவையின் முடிவு விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதை எடுத்துக்காட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

ஒரு குவிண்டால் கொப்பரை தேய்காய் துண்டுகளுக்கு ஆதரவு விலையாக 11 ஆயிரத்து 582 ரூபாயும், முழுமையான கொப்பரைத் தேங்காய்க்கு ஒரு குவிண்டாலுக்கு 12 ஆயிரத்து 100 ரூபாயும் ஆதரவு விலையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சிலின் 55வது கூட்டம் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

ஹரியானா, ஒடிசா, ஜம்மு-கஷ்மீர், கோவா, மேகாலயா மாநிலங்களின் முதலமைச்சர்களும், பீஹார், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், தெலங்கானா, அருணாச்சலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் துணை முதலமைச்சர்களும், தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் நிதியமைச்சர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்கள்.

உணவு வினியோக சேவைத்துறை மீதான வரி தொடர்பாகவும், ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீடு பிரீமியம் மீதான வரியை குறைப்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சில வரி விகிதங்களை சீரமைப்பது தொடர்பாகவும், உயர்தர கைகடிகாரங்கள், காலனிகள், ஆயத்த ஆடைகள் உள்ளிட்ட பொருட்கள் மீதான வரிகளை மாற்றியமைப்பது குறித்தும், விமான எரிபொருளை சரக்கு மற்றும் சேவை வரியின்கீழ் கொண்டு வருவது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில் நடப்பாண்டிற்கு 10 ஆயிரம் கோடி ரூபாயும், அடுத்த ஆண்டிற்கு 16 ஆயிரம் கோடி ரூபாயும் மத்திய பட்ஜெட்டில் ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

அடுத்த ஆண்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ள பட்ஜெட் குறித்து ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில், மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்.

மதுரை மற்றும் கோயம்புத்தூர் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பல்வேறு திட்டங்களுக்கு நிதியை விடுவிப்பதில் உள்ள கடுமையான கட்டுப்பாடுகளையும், கூடுதலான நிபந்தனைகளையும் மத்திய அரசு தளர்த்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்திற்கான 2 ஆயித்து 152 கோடி ரூபாயை உடனே விடுவிக்க வேண்டும் என்றும் மாநில நிதியமைச்சர் வலியுறுத்தினார்.

புயல் மற்றும் கனமழையால் தமிழ்நாடு தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதால் மாநில அரசின் பேரிடர் நிவாரண நிதிக்கு, தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து 6 ஆயிரத்து 675 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தாம்பரம், செங்கல்பட்டு இடையே 4வது இருப்புப் பாதை வழித்தடம், திருப்பத்தூர் - கிருஷ்ணகிரி – ஒசூர் புதிய இருப்பபுப் பாதை வழித்தடம், மதுரையில் இருந்து அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடிக்கு புதிய இருப்புப் பாதை உள்ளிட்ட தமிழகத்தில் நிலுவையில் உள்ள இருப்புப் பாதை திட்டங்களுக்கு மத்திய அரசு போதிய நிதி ஒதுக்க வேண்டும் என்றும் அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

<<<<>>>>

பண மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த திரு. செந்தில் பாலாஜிக்கு ஜாமின் கிடைத்தவுடன் அவரை மாநில அமைச்சராக நியமித்தது தவறு என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

திரு. செந்தில் பாலாஜிக்கு ஜாமின் வழங்கியதை மறுஆய்வு செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீது நேற்று விசாரணை நடைபெற்றபோது இதனைத் தெரிவித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், பணமோசடி வழக்கில் எத்தனை சாட்சிகள் உள்ளனர் என்ற விவரத்தை தாக்கல் செய்ய உத்தவிட்டனர்.

இதுவரை எத்தனை சாட்சிகளிடம் விசாரணை நடைபெற்றுள்ளது என்பதையும், சாட்சிகளில் எத்தனைபேர் அரசு ஊழியர்கள் என்பதையும் திரு. செந்தில் பாலாஜி மீது நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரங்களையும் நீதிமன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள் வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 15ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

<<<<>>>>

சட்டவிரோத அமைப்புகளின் செயல்பாடுகளால் கோவையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

கோவையில் நேற்று நடைபெற்ற கருப்பு தின பேரணியில் கலந்துகொண்டு பேசிய அவர், 1998ஆம் ஆண்டு கோவை குண்டுவெடிப்பின்போது காவல்துறையினர் விழிப்புடன் செயல்பட்டிருந்தால் அந்த சம்பவத்தை தடுத்திருக்க முடியும் என்று கூறினார்.

திமுக அரசு மட்டுமல்லாமல் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன் மற்றும் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் ஆகியோர் சட்டவிரோத அமைப்புகளுக்கு ஆதரவு தெரிவிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட திரு. அண்ணாமலை, பிஜேபி சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

<<<<>>>>

கிறிஸ்துமஸ் பண்டிகையை இந்த ஆண்டும் உற்சாகமாகக் கொண்டாட உதகமண்டலம் தயாராகி வருகிறது.

சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வகையில் உதகமண்டலத்தில் உள்ள விடுதிகள், மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியடையும் வகையில் மிகப்பெரிய கிறிஸ்துஸ் மரம், ஆயிரத்து 823 பிஸ்கட்டுகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள ஜிஞ்சர் பிரட் ஹவுஸ் ஆகியவை சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகிறது.

<<<<>>>>

வங்கக் கடலின் மத்திய மேற்கு மற்றும் அதனையொட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, வடக்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதியில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஜெர்மனியில் கிறிஸ்துமஸ் சந்தையில் மர்ம நபர் நடத்திய தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர். 68 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

நேபாளத்தில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4 புள்ளி 8ஆக பதிவானது.

<<<<>>>>

பாகிஸ்தானின் வர்த்தக நகரமான கராச்சியில் போலியோ தடுப்பூசி குழுவினர் மீது தாக்குதல் நடத்தியதாக 6 பேரை அந்நாட்டு காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

ஒடிசா மாநிலத்திற்கான முழுமையான விவசாயக் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும் என்று அம்மாநில துணை முதலமைச்சர் திரு. கே.வி. சிங் தியோ தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தில்லியில் உள்ள பள்ளிகளில் பங்களாதேஷ் அகதிகளின் குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனரா என்பது குறித்து விசாரிக்க தில்லி மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

<<<<>>>>

தேசிய மின்சக்தி சிக்கன வாரவிழாவை முன்னிட்டு திருவண்ணாமலையில் நேற்று தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சார்பில் விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கு நடைபெற்றது.

<<<<>>>>

கரூர் மாவட்டம் மணல்மேடு பகுதியில் ஒரு தனியார் டெக்ஸ்டைல் நிறுவனத்தில் நேற்று தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, தீயணைப்புத்துறையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனையை தடுப்பது குறித்து மாவட்ட அளவிலான கூட்டம், மாவட்ட ஆட்சியர் திரு. பிரபுசங்கர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

திருப்பத்தூர் அருகே காரில் கடத்திவரப்பட்ட பல லட்சம் ரூபாய் மதிப்பிலான செம்மரக்கட்டைகளுடன் ஒருவரை காவல்துறையினர் கைது செய்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

<<<<>>>>

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை சென்னை வில்லிவாக்கத்தில் 2 இடங்களில் விற்பனை செய்ததாக 2 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

விஜய் ஹசாரே கோப்பைக்கான கிரிக்கெட் லீக் போட்டியில் தமிழ்நாடு இன்று சண்டிகர் அணியை எதிர்கொள்கிறது.

ஆந்திர மாநிலம் விஜய்நகரில் இன்று காலை 9 மணிக்கு இந்தப் போட்டி தொடங்குகிறது.

ஜெய்ப்பூரில் நடைபெறும் போட்டியில் அசாம் - ஜார்கண்டையும், மும்பையில் நடைபெறும் போட்டியில் ஆந்திரா – ரயில்வே அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கோவா அணி 2-1 என்ற கோல் கணக்கில் மோகன் பகான் அணியை வென்றது.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

இரவு மணி 7.30க்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி - ஜம்ஷெட்பூர் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

புனேயில் நேற்று நடைபெற்ற ப்ரோ கபடி லீக் போட்டியில், ஜெய்ப்பூர் அணி 31-28 என்ற புள்ளிக் கணக்கில் பெங்கால் அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் தெலுகு அணி 48-36 என்ற புள்ளிக் கணக்கில் புனே அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் பட்னா அணி – குஜராத் அணியையும், தில்லி அணி – ஜெய்ப்பூர் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

இந்தியா – மாலத்தீவு அணிகளுக்கு இடையே நட்புரீதியிலான மகளிர் கால்பந்து போட்டி இம்மாதம் 30ஆம் தேதியும், அடுத்த மாதம் 2ஆம் தேதியும் நடைபெறும் என்று அகில இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

இந்தப் போட்டிகள் பெங்களூருவில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் வெளியிடப்பட்ட சர்வதேச கால்பந்து சம்மேளன தரவரிசைப் பட்டியலில் இந்தியா 69வது இடத்திலும், மாலத்தீவு 163வது இடத்திலும் உள்ளன.

<<<<>>>>